இணைப்பு 01

இலங்கை பாராளுமன்றத்தின் பொதுக் கணக்குகள் மீதான குழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட நிலையியற் கட்டளை 119/(4) தொடர்பான அவதானிப்புகள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்

பாராளுமன்ற வெளியீடுகள்: இல 79

மாவட்ட செயலகம் – பொலன்னறுவை

பொ.க. குழுவினால் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகள் மற்றும் வழிகாட்டுதல்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் தற்போதைய அடைவு
முதலாவது பிரிவு	
நிலையான சொத்து பதிவேடு புதுப்பிக்கப்படவில்லை.	நிதியல்லாத சொத்துக்கள் கணக்கிடுவது தொடர்பாக வெளியிடப்பட்ட 2013.07.12 ஆம் தேதியிட்ட பொதுக் கணக்குத் திணைக்கள சுற்றறிக்கை கடிதத்தினூடாக சொத்துக்கள் வகைப்படுத்தி அதற்குரிய குறியீடுகள் வழங்கப்பட்டுள்ளதுடன், பொதுக் கணக்கு சுற்றறிக்கை இலக்கம் 267/2018 இன் 8.1 மற்றும் 8.2 பந்தியின் பிரகாரம் CIGAS கணினி நிரலில் நிலையான சொத்து தொகுதி அமைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் மாவட்ட செயலகம் மற்றும் அனைத்து பிரதேச செயலங்கள் மூலம் சொத்துக்கள் அனைத்தும் கணக்கிடப்பட்டு, புதுப்பித்த நிலையில் பராமரிக்கப்படுகின்றது என தெரிவித்துக் கொள்கின்றேன்.
அபாயப் பதிவேடு புதுப்பித்த நிலையில் வைக்கப்படவில்லை	2019.05.21 ஆம் தேதியிட்ட முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களத்தின் 01/2019 இலக்க சுற்றறிக்கையின்படி உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் 2024 முதல் அபாயப் பதிவேடு புதுப்பிக்கப்பட்டு பராமரிக்கப்படுகின்றது என்பதைக் குறிப்பிடுகின்றேன்.
கணக்காய்வாளர் நாயகத்தினால் முன் வைக்கப்பட்டுள்ள அனைத்து கணக்காய்வுக் கேள்விகளுக்கும் ஒரு மாதத்திற்குள் பதில் வழங்கப்படவில்லை.	2018 ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்ட மூலத்தின் **38** ஆவது பந்தியின்படி கணக்காய்வுக் கேள்விகளுக்கும் ஒரு மாதத்திற்குள் பதிலளிப்பதற்கு அனைத்து பிரதேச செயலகங்களுக்கும் மற்றும் மாவட்ட செயலகத்தின் அனைத்துப் பிரிவுகளுக்கும் அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதோடு, அதன்படி பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.
அனைத்து வாகனங்களிலும் அரச இலச்சினை பொறிக்கப்பட்டிருக்கவில்லை.	மாவட்ட செயலகத்தின் அனைத்து கையிருப்பு வாகனங்களிலும் தற்போது வரை அரச இலச்சினை பறிக்கப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.
ஒரு வருடத்திற்கும் மேலாக கடன் நிலுவைகள் இருந்தன.	ஓராண்டுக்கு மேலாக நிலுவையில் உள்ள இரண்டு கடன் நிலுவைகள் தவிர, அனைத்து கடன் நிலுவைகள் வசூலிக்கப்பட்டும், அவற்றை வசூலிப்பதற்கும் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சின் 29.05.2024 தேதியிட்ட அரச நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 01/2024 இன் கீழ் இருபது ஆண்டுகளுக்கு மேலான பின்வரும் முற்பண "பி" கணக்கின் கீழ்

<table>
<tr><td></td><td>வழங்கப்பட்ட கடன் முற்பணங்களை தள்ளுபடி செய்வது தொடர்பாக தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
<table>
<tr><th>உத்தியோகத்தரின் பெயர்</th><th>இறந்த / சேவையை விட்டுச் சென்ற திகதி</th><th>சேவை செய்த நிறுவனம்</th><th>பதவி</th><th>கடன் நிலுவை (ரூ.)</th><th>கடன் வகை</th></tr>
<tr><td>திரு எஸ்.ஏ.பீ.மாகெஹெல்வல</td><td>2001.11.02</td><td>மாவட்ட செயலகம், பொலன்னறுவை</td><td>மாவட்ட செயலாளர்</td><td>254,645.31</td><td>வாகனம்</td></tr>
<tr><td>திரு கே.பீ.ஜீ.குணதிலக</td><td>2000.05.30</td><td>பிரதேச செயலகம், திம்புலாகல</td><td>அலுவலக உதவியாளர்</td><td>45,075.00</td><td>அனர்த்தம்/ துவிச்சக்கரவண்டி</td></tr>
</table></td></tr>
<tr><td>பொது வைப்புக் கணக்கில் காலதாமதமான வைப்புகள் குறித்து, நி.பி.571ன் படி நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.</td><td>பொது வைப்புக் கணக்கில் காலாவதியான வைப்புத்தொகை தொடர்பாக, நி.பி.571ன் படி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.</td></tr>
<tr><td colspan="2">இரண்டாவது பிரிவு</td></tr>
<tr><td>மாதாந்தம் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் நடைபெறவில்லை.</td><td>இதுவரை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரினால் வழங்கப்பட நாட்களில் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் நடைபெற்றது என்று தெரிவிப்பதோடு, இனிவரும் காலங்களில் மாதாந்தம் நடத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.</td></tr>
<tr><td>மாவட்ட செயலாளரினால் கூட்டப்படும் பிரதேச செயலாளர் மாநாடு மாதாந்தம் நடத்தப்படவில்லை.</td><td>பிரதேச செயலாளர் மாநாட்டை மாதாந்தம் நடாத்துவதற்கு இனிவரும் காலங்களில் ஆயத்தம் செய்யப்படும் என்பதை குறிப்பிடுகின்றேன்.</td></tr>
<tr><td>மாவட்ட வீட்டு வசதிக் குழு மாதாந்தம் கூடவில்லை.</td><td>மாவட்ட வீடமைப்புக் குழுவானது வீடமைப்புப் பிரச்சினைகளுக்காகவும் தேவைகளுக்காகவும் மாத்திரம் தற்போது வரை நடாத்தப்பட்டுள்ளதுடன் இனிவரும் காலங்களில் மாதாந்தம் நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.</td></tr>
<tr><td>கோரப்பட்ட தகவல்களை வழங்காதது தொடர்பாக முன் வைக்கப்படுகின்ற முறையீடுகள் ஆவணப்படுத்தல் மற்றும் அது தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை விளக்கும் ஆவணங்கள் பராமரிக்கப்படவில்லை.</td><td>முன்வைக்கப்பட்ட முறையீடுகள் ஆவணப்படுத்தல் மற்றும் அது தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து விளக்கும் ஆவணம் புதுப்பித்த நிலையில் பேணுவதற்கு தேவையான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.</td></tr>
</table>

நிறுவனத்தின் பிரஜை/பயனாளர் சாசனம் செயல்படுத்தப்படுவது தொடர்பாக கண்காணிப்பதற்கு அல்லது மதிப்பீட்டுக்குட்படுத்துவதற்கு வழிமுறைகள் தயாரிக்கப்படவில்லை.	மாவட்டத்தின் குடிமக்களின் தரவுகளை சேகரித்தல் மற்றும் அவர்களுக்கு திறமையான சேவையை வழங்குவதையும், உள்ளக சேவைகளை நல்ல செயல்திறனுடன் பராமரிப்பதையும் நோக்கமாகக் கொண்டு ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி திட்டத்தின் (UNDP) ஏற்பாடுகளின்படி செயல்படுத்தப்படும் Capacity Development of Local Government (CDLG) திட்டத்தின் கீழ் மேம்படுத்தப்பட்ட குடிமக்கள் சேவை தரவு அமைப்பு தற்போது அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளதுடன் தற்போது அதன் செயல்பாடுகள் குறித்து பிரதேச செயலக மட்டத்தில் விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
தயாரிக்கப்பட்ட மனிதவளத் திட்டமானூடாக ஒரு பணியாளருக்கு குறைந்தபட்சம் வருடத்திற்கு 12 மணிநேரம் மேலதிக பயிற்சி பரிந்துரைக்கப்படவில்லை.	கடந்த காலங்களில் காணப்பட்ட கோவிட் தொற்றுநோய் மற்றும் ஏற்பாடுகள் கட்டுப்படுத்தப்படுதல், குறைந்த உத்தியோகத்தர்களை சேவைக்கு அழைத்தல் காரணமாக பயிற்சிகள் வழங்குவதற்கு முடியாமல் போனதுடன், தற்போது ஒரு குறிப்பிட்ட உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டு அதற்கான பணிகள் மேற்கொள்ளப்படுகின்றதா என்பதை மேற்பார்வையிட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அதன்படி, அரச உத்தியோகத்தர்களின் சேவைக்குத் தேவையான நிறுவனங்கள், கணக்கியல் தொடர்பான பயிற்சி, உற்பத்தித்திறன் பயிற்சி திட்டங்கள், கிராம உத்தியோகத்தர் பயிற்சி, நிதிக் கணக்காய்வு மற்றும் நிதி முகாமைத்துவம் ஆகிய வேலைத்திட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன.
அடையாளம் காணப்பட்ட செயல்திறன் குறிகாட்டிகளை அடைவது 24% க்கும் குறைவாக இருந்தது.	உதவி மாவட்ட செயலாளரை நியமித்து உரிய பணிகள் நடைபெறுகிறதா என்பதை மேற்பார்வையிட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதுடன், பொலன்னறுவை மாவட்ட செயலகத்தில் மற்றும் அனைத்து பிரதேச செயலகங்களிலும் அடையாளம் காணப்பட்ட செயல்திறன் குறிகாட்டிகளில் அதிக சதவீதத்தை அடைவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
மாவட்ட மற்றும் பிரதேச போதைப்பொருள் தடுப்புக் குழு காலாண்டுக்கு 01 வீதம் கூடவில்லை.	2022 ஆம் ஆண்டைப் பொறுத்தவரை காலாண்டுக்கு ஒரு முறை கூடவில்லை, தற்போது திட்டமிட்டபடி கூட்டங்கள் நடாத்தப்படுகின்றன என்பதை குறிப்பிடுகின்றேன்.
மாவட்டக் காணி உபயோகக் குழு குறைந்தது காலாண்டுக்கு ஒருமுறை கூடவில்லை.	மாவட்ட காணி உபயோகக் குழு கூட்டம் குறைந்தது காலாண்டுக்கு ஒரு முறை நடாத்தப்பட வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.
2005 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க இலங்கை அனர்த்த முகாமைத்துவ சட்டத்தின் படி, அனர்த்த முகாமைத்துவ குழுக் கூட்டம் நடாத்தப்படவில்லை.	2022 ஆம் ஆண்டு ஏற்பட்ட அனர்த்தங்களை எதிர்கொண்டு குழுக் கூட்டங்கள் திட்டமிட்டபடி நடத்தப்படவில்லை, தற்போது 2005 ஆம் ஆண்டு 13 ஆம் இலக்க இலங்கை அனர்த்த முகாமைத்துவ சட்டத்தின் பிரகாரம் அனர்த்த முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.
திட்டமிடப்பட்ட பயிற்சி வாய்ப்புகளில் வழங்கப்பட்ட பயிற்சி வாய்ப்புகளின் அளவு 50% க்கும் குறைவாக இருந்தது.	கடந்த காலங்களில் காணப்பட்ட கோவிட் தொற்றுநோயை எதிர்கொண்டு செயல்படுவதற்கு கடினமாக இருந்தாலும், நிகழ்நிலை முறையின் கீழ் உத்தியோகத்தர்களுக்கு வாய்ப்புகள் வழங்கப்பட்டன.

	அதன்படி 2022, 2023 ஆம் ஆண்டுகளுக்குரியதான நிதி முகாமைத்துவம், நிதிக் கணக்காய்வு, கிராம உத்தியோகத்தர் ஆகிய பயிற்சி நிகழ்ச்சிகள் நடாத்தி முன்னேற்றத்தை அதிக மதிப்பிற்கு கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையின் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்படவில்லை.	இதுவரை தீர்க்கப்படாத 03 பிரச்சினைகளை பொதுக் கணக்குகள் மீதான குழுவினால் சுட்டிக்காட்டப்பட்டிருந்ததுடன், அதில் 02 முழுமையாக தீர்க்கப்பட்டுள்ளன. மீதமுள்ள வீட்டு வாடகை நிலுவை தொடர்பாக பிரச்சினைக்குரிய ரூ.12,800.00 வை மாதாந்த தவணை முறையில் செலுத்தப்படுகிறது. அதன்படி 2024..07.31 திகதி வரை மேலும் ரூ.64,000/= வசூலிக்கப்படுவதற்கு உள்ளது என தெரிவிப்பதோடு, 2024 டிசம்பர் மாதத்தினுள் இந்த பிரச்னைக்கு தீர்வு காணப்படும் என்றும் தெரிவித்துக்கொள்கின்றேன்.
அதிகபட்ச சேவைக் காலத்தை நிறைவு செய்த உத்தியோகத்தர்கள் முறையாக இடமாற்றம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.	05 வருடங்களை பூர்த்தி செய்த உத்தியோகத்தர்கள் தொடர்பான தகவல்கள் வருடாந்த இடமாற்ற சபைக்கு சமர்ப்பிக்கப்படுவதோடு, 2024.01.01 ஆம் திகதி முதல் நடைமுறைக்குள்ளாகும் வகையில் உள்ளக இடமாற்றங்களும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.
மாவட்ட சுற்றாடல் குழு குறைந்தது 02 மாதங்களுக்கு ஒரு தடவை கூட கூடவில்லை.	சுற்றுச்சூழல் அமைச்சின் செயலாளரின் 2021.01.02 தேதியிட்ட 01/2021 இலக்க சுற்றுச்சூழல் சுற்றறிக்கையினுடாக வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின்படி மாவட்ட சுற்றுச்சூழல் குழு கூட்டம் நடாத்தப்படுகின்றது என்பதை குறிப்பிடுகிறேன்.

....

மாவட்ட செயலாளர்/அரசாங்கதிபர்

மாவட்ட செயலகம்

Sujantha Ekanayake
District Secretary / Government Agent
Polonnaruwa

....

பிரதான கணக்காளர்

மாவட்ட செயலகம்

M. Kalaignanasundaram
Chief Accountant
For Polonnaruwa District Secretary

செயலாளரின் பரிந்துரை

மாவட்ட செயலாளரினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதுடன் அடையாளம் காணப்பட்ட குறைபாடுகளுக்கு தனிப்பட்ட கவனம் செலுத்தி அவற்றை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு மாவட்ட செயலாளரிக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளது.

Pradeep Yasarathna
Secretary
Ministry of Public Administration, Home Affairs,
Provincial Councils & Local Government
(Home Affairs Division)
"NILA MEDURA" Elvitigala Mawatha, Colombo 05.

பிரதீப் யசரத்ன

செயலாளர்

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள்,

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

அமைச்சரின் பரிந்துரைகள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

அரசாங்க கணக்குக்குழு மூலம் மாவட்ட செயலாளரிற்கு வழங்கப்பட்டிருக்கும் ஆலோசனைகளுக்கு சிறப்பு கவனம் செலுத்தி, அக்குறைபாடுகள் மீண்டும் ஏற்படாமல் இருக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்க அமைச்சின் செயலாளரிற்கு நான் அறிவுறுத்தியுள்ளதுடன், அச்செயற்பாடுகள் மூலம் 2024 ஆம் ஆண்டிற்குள் அதன் அடைவு மட்டத்திலிருந்து உயர் மட்டத்தை எட்ட முடியும் என்று எதிர்பார்க்கின்றேன்.

கௌரவ தினேஸ் குணவர்தன (பா.உ.)

பிரதம அமைச்சர் மற்றும்

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்